# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No.**16/2022 **Date**: 16.07.2025

**PW**2- செந்தில்குமார்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதியை எனக்கு தெரியாது. துரைசாமியை எனக்கு தெரியாது. பிரதிவாதியை எனக்கு 6, 7 வருடங்களாக தெரியும். அவர் ஊர் ஊராக சென்று நிலக்கடலை வியாபாரம் செய்வதால் எனக்கு பழக்கம். வா.சா.ஆ.1 ஐ வாதி வீட்டில் வைத்து எழுதினார்கள். எழுதும்போது நேரம் காலை 8.00 மணி இருக்கும். நான் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் வாதி வீட்டிற்கு சென்றேன். நான் போகும்போது வாதி மட்டும்தான் இருந்தார். நாங்கள் மூவரும் சேர்ந்துதான் சென்றோம். வா.சா.ஆ.1 ஐ நான்தான் எழுதினேன். வா.சா.ஆ.1 ல் துரைசாமி முதலில் கையெழுத்து செய்தார். கடன் தொகையை நான் எண்ணி பார்க்கவில்லை, பிரதிவாதிதான் எண்ணிப் பார்த்தார். வாதி ஓட்டல் கடை வைத்து தொழில் செய்கிறார். வா.சா.ஆ.1 க்கு பிறகு நான் அவ்வப்போது அவர் கடைக்கு செல்வேன். கல்லபாளையம் மாதுவை எனக்கு தெரியாது. பிரதிவாதி வட்டி செலுத்தவில்லையென்று நான் வாதியின் கடைக்கு சென்றபோது அவர் என்னிடம் சொன்னார். பிரதிவாதியை பார்த்தால் வட்டி கொடுக்கும்படி கேட்க சொன்னார், நானும் கேட்டேன், அதன் பிறகு பிரதிவாதி என்னிடம் பேசுவதில்லை. பிரதிவாதி முதலில் கையெழுத்து செய்தார். அதன் பிறகு ரேகை வைத்தார். துரைசாமி கையெழுத்து செய்த பின்பு, 2 வதாக பிரதிவாதி கையெழுத்து செய்துவிட்டு ரேகை வைத்தார். கல்லபாளையம் மாது என்பவரிடம் பிரதிவாதி சீட்டு போட்டு வந்தார் என்றாலும், அந்த வகையில் மாது என்பவர் வாதி மற்றும் என்னுடைய உதவியுடன் பொய்யாக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ன் வாசகதத்தை நானாகவே எழுதிக்கொண்டேன். வா.சா.ஆ.1 ஐ எழுதும்போது வாதி, ஜெகதீசன், துரைசாமி

ஆகியோரும் என்னுடன் இருந்தார்கள். பிரதிவாதி இரு சக்கர வாகனத்தில் துரைசாமியுடன் வந்தார். மாது என்பவர் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கும் என்னை தெரியாது என்றால், சரியல்ல.

ஒப்பம்/- செந்தில்குமார்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.